*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **21 நவம்பர் 2022**

**<u>உலக மீனவர் தின வாழ்த்துச் செய்தி</u>**

உலக மீனவர் தினத்தை ஒட்டி மீனவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலக பாரம்பரிய தொழில் முறைகளில் ஒன்றான மீன்வளம் உலக மக்களின் வாழ்வாதாரத்திறகும் பொருளாதாரத்திற்கும் அச்சாணியாக விளங்குகிறது.

மாண்புமிகு பாரதப் பிரதமரின் வழிகாட்டுதல்படி மீனவர்களின் சமுதாய மேம்பாட்டிற்காகவும் பொருளாதார வளர்ச்சிக்காகவும் பாதுகாப்பிற்காகவும் மத்திய அரசும் புதுச்சேரி அரசும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

மீனவர்களின் நலவாழ்விற்கான பாதுகாப்புகளை உறுதி செய்து மீனவர்களுக்கு பக்க பலமாக என்றென்றும் மத்திய, மாநில அரசுகள் இருக்கும். அனைவருக்கும் மீனவர் தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன்)